www.tamilarangam.net

# ஓர் அவசர வேண்டுகோள்

## தமிழீழ விடுதலைக்காக போராடும் போராளிகளே!
## தமிழீழ மக்களே!!

உங்கள் அனைவர் முன்னும் உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டிய சில அவசரப் பிரச்சனைகளை முன்வைக்க வேண்டியது எமது கடமை எனக் கருதி சில கேள்விகளை எழுப்ப முனைகிறோம்.

அண்மையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அராஜகம் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு தமிழ் மகனும் இதனால் பாதிக்கப் படும் அச்சத்தால் வீட்டினுள் அடைபட்டுக் கிடக்கும் நிலைமை தோன்றியுள்ளது.

கொள்ளைகள், கொலைகள், மின்கம்பத்தண்டனைகள்.......

இறுதியாக இன்று இயக்க அங்கத்தவர்களுக்கே, ஆயுதம் ஏந்திய போராளிகளுக்கே பாது காப்பில்லை என்ற நிலை. தமிழ் மக்களின் விமோசனத்திற்காகப் போராடும் விடுதலைப் போரா ளிகள் மக்களின் சொத்துக்கள். இவர்களை அழிப்பதனால் இந்த இயக்கங்கள் எதனை சாதிக் கப்போகின்றன?

நிச்சயமாக விடுதலையை அல்ல.

இந்த நிலைமை தொடருமானால் தமிழ் மக்களின் எதிர்காலம்?

இந்த நிலைமை இன்று திடீரெனத் தோன்றியதா? - இல்லை.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நாள் முதல் சிறிது சிறிதாகத் தோன்றி, வளர்ந்து .......... இன்று பூதாகர வடிவம் பெற்றுள்ளது.

அப்படியானால் இவ்வளவு காலமும் இதனை அனுமதித்ததெப்படி தோழர்களே!

யாருக்கோ நடப்பதாக எண்ணி பேசாது இருந்தோம். எமக்குச் சாதகமாக இருந்தபோது நியாயப்படுத்தினோம். தேவைப்பட்டபோதெல்லாம் நாமே செய்துவிட்டு மறுப்பறிக்கை விட் டோம் அல்லது நியாயப்படுத்தினோம்.

விளைவு, இந்த அராஜகத்தின் வளர்ச்சிக்கு தவிர்க்கமுடியாமல் நாமே பலியானோம்.

இப்போது திடுக்கிட்டு விழித்தெழுந்து அராஜகம் பற்றிக் கோசமெழுப்புகிறோம்.

அநீதியை கண்டிக்கிறோம்.

எம்மால் ஏமாற்றப்பட்ட மக்களை விழித்தெழுமாறு அறை கூவுகிறோம்.

துக்கதினம், கர்த்தால் அனுஷ்டிக்குமாறு வற்புறுத்துகிறோம்

கைக்குண்டுகளை வெடிக்க வைத்து கடைகளை மூடுவிக்கிறோம்.

துப்பாக்கி முனையில் பத்திரிகையாளரை மிரட்டி அறிவித்தல் விடுக்கிறோம்.

சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே!

எமக்கு அந்தளவிற்கு யோக்கியதை உண்டா?

எமது இழப்பிற்காக மக்களை துக்கதினம் கொண்டாடுமாறு கேட்கும் தார்மீகபலம் எமக்கு உண்டா?

இந்த அராஜகங்களை வளர்ப்பதில் எமக்குப் பங்கிருக்கவில்லையா?

இயக்கங்களின் அவசர விசாரணைகளால், தவறான முடிவுகளால் சமூக விரோதிகளாக கொலை செய்யப்பட்ட பொது மக்கள் எத்தனைபேர்?

கொல்லப்பட்ட மாற்று இயக்கப் போராளிகள் எத்தனைபேர்?

தமது இயக்கத்துக்குள்ளேயே நீதியைக் கேட்டதற்காக கொன்று புதைக்கப்பட்ட தோழர்கள் எத்தனைபேர்?

இத்தனை அநீதிகளும் எம் கண்முன்னால்தானே நடந்தன நாமும் சேர்ந்துதானே அவர்கள் புதைகுழிகளில் மண்ணை அள்ளிப்போட்டோம் ........ ஏதும் தெரியாதென சாதித் தோம்; சந்தர்ப்பம் வாய்த்தபோது நியாயப்படுத்தினோம். அன்று எம்மால் அனுமதிக்கப்பட்ட, ஊட்டி வளர்க்கப்பட்ட, உற்சாகப்படுத்தப்பட்ட அதே அராஜகம் இன்று எமது மார்பில் பாயும் போது விழிப்பு வந்துவிட்டதா தோழர்களே?

மக்களை துணைக்கழைக்கின்றீர்கள்.

காலம் கடந்த ஞானம் தோழர்களே!

மக்கள் உறங்கிவிட்டார்கள்... ......... இல்லை; உறங்கவைக்கப்பட்டார்கள்.

www.tamilarangam.net

"லங்கா புவத்" செய்திக்கும், இயக்கச் செய்திகளுக்கும் வேறுபாடு காணமுடியாது திண்டாடியவர்கள், அநீதிகளை அடுத்து அடுத்து முகம் கொடுப்பதை தவிர்ப்பதற்காக கண்களை இறுக மூடிக் கொண்டார்கள்.

அப்படியானால் நாம் .......... இப்படியே அழிய வேண்டியது தானா?

எமது சொன்னவைகள், இலட்சியங்கள், தியாகங்கள், அர்ப்பணிப்புகள் எல்லாமே விழலுக்கிறைத்த நீர் தானா?

மக்களின் விமோசனத்திற்காக மறைந்த எமது தோழர்கள் சிந்திய குருதி-அவர்களது கனவுகள் அனைத்தும் அர்த்தமற்றுப் போவதா?

எமது மக்கள் தொடர்ந்து அடிமைகளாக வாழ, அழிந்துபோக அனுமதிக்கப் போகிறீர்களா தோழர்களே?

இல்லை ! இல்லை ! இல்லவேயில்லை

அராஜகம் யார் வடிவில் வந்தாலும், யார்மீது இழைக்கப்பட்டாலும், எந்தக் காரணங்களால் நியாயப்படுத்தப்பட்டாலும் எதிர்த்து நிற்போம்.

அந்நிய மண்ணில், மெய்க்காவலர்கள் புடைசூழ, ஆடம்பர மாளிகைகளில் வாழும், கார்களில் பவனிவரும் தலைமைகள் இப் பிரச்சனைகளை உணர்ந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கமுடியாது. தமது தலைமையை காக்க இயக்க செல்வாக்கை நிலைநாட்ட, பொதுமக்களை, சக இயக்கப் போராளிகளை, சக போராளிகளை, கொலை செய்யக் கட்டளையிடும் இவர்கள் தமது இயக்கத்திலுள்ள ஒவ்வொரு போராளிகளினதும் உயிருக்கு உத்தரவாதம் தரமுடியுமா? முடியாது விளைவு தலைமையின் சதுரங்க விளையாட்டில் கீழணியிலுள்ள விசுவாசமிக்க போராளிகள் அநியாயமாக பலியானார்கள்.

ஆகவே, சக போராளிகளை, சக இயக்கப் போராளிகளை, அப்பாவி மக்களை கொலை செய்வதை உடனடியாக நிறுத்த முன்வருவோம். விசாரணைகளை மக்கள்முன் பகிரங்கமாகச் செய்யுமாறு தலைமைகளை நிர்ப்பந்திப்போம். மக்களே -'மக்கள் மட்டுமே எமது போராட்டத்தின் ஒரே ஆதார சக்தி' என்பதை அவர்களுக்கு உணர்த்துவோம். எம்மால் ஏமாற்றப்பட்டு உறங்கிக்கொண்டிருக்கும் மக்களை மட்டும் தனியே அராஜகத்திற்கெதிராக போராடும்படி தூண்டாது நாமே முன்னின்று அராஜகத்திற்கெதிராகப் போராடுவோம்.

ஒரு போராட்டத்தின் வெற்றிக்கு அப் போராட்டம் நடைபெறும் சூழ்நிலை ஆரோக்கியமாக இருக்கவேண்டியது அத்தியாவசியமானது. எமது பொறுப்பற்ற அராஜக நடவடிக்கைகளால் அந்த சூழலை மாசுபடுத்திவிட்டால் முழுப்போராட்டமும் தோல்வியை அடையும். இச் சந்தர்ப்பத்தை தவறவிட்டால் தமிழ்ச் சமுதாயம் இனி எந்தத் தலைமுறையிலும் விடுதலை பெறமாட்டாது என உணர்ந்து [illegible]வோம்.

ஆகவே தோழர்களே! ஒரு உயர்ந்த இலட்சியத்திற்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடும் போராளிகள் நாம் அனைவரும் நண்பர்கள் என்பதை உணர்வோம். சக தோழனுக்கு எதிராக ஏவப்பட்ட துப்பாக்கி எமக்கெதிராக ஏவப்பட்டதாகக்கொள்வோம். போராளிகளை தமக்குள் மோதவிடும் தவறான தலைமையின் சுயநலங்களை இனங்காண்போம்; அம்பலப்படுத்துவோம்; தூக்கியெறிவோம். பிற்போக்கு சக்திகள் நடுநடுங்கும்படியாக 'அராஜகத்திற்கு அடிபணியமாட்டோம்' என முழங்குவோம். தமது முழக்கம் இதுவரை காலமும் அராஜகத்திற்கு பலியிடப்பட்டவர்களின் கல்லறைவரை சென்று ஒலிக்கட்டும்.

## தமிழீழ மக்களே!

இன்று தோன்றியுள்ள இந்த நிலைமைகள் உங்களை முழுப் போராட்டத்தின் மேலும் வெறுப்படையச் செய்கின்றன. இப்படிப்பட்ட ஒரு போராட்டம் தேவைதானா எனக் கேள்வியெழுப்பத்தொடங்கியுள்ளீர்கள். அராஜகத்தை தாங்க முடியாத சிலர் எதிரியிடமும் சரணடைகின்றனர்.

தமிழீழப்போராட்டமானது தமிழ் மக்கள் மேல் பலவந்தமாக திணிக்கப்பட்டுள்ள ஒரு போராட்டமாகும். இதில் நாம் பெறும் வெற்றி மட்டுமே எம்முடையதும் எமது சந்ததிகளினதும் வருங்காலத்தை நிச்சயப்படுத்துமாதலால் போராடுவதொன்றே எம்முன்னுள்ள ஒரே வழியாகும்.

எமது போராட்டத்தை மாசு படுத்தும் அனைத்து அராஜகப் போக்குகளையும் எதிர்த்து நில்லுங்கள் அராஜகவாதிகளுக்கு உங்கள் எதிர்ப்பை அனைத்து வழிகளிலும் காட்டுங்கள். அப்பாவி மக்கள், விடுதலைப் போராளிகள்மேல் நடத்தப்படும் படுகொலைகளை யார் செய்தாலும் கண்டியுங்கள். அவர்கள் மீதான விசாரணைகளை மக்கள் முன் நிகழ்த்துமாறு கோருங்கள்.

## தவறான சக்திகளை தூக்கியெறியுங்கள்! மக்கள் மட்டுமே வரலாற்றை படைப்பவர்கள் என்பதை உணர்த்திக் காட்டுங்கள்!

# புரட்சிகர தலைமையை உருவாக்கிப் போராட்டத்தை சரியான பாதையில் முன்னெடுப்போம்!

டிசம்பர் 20, 1985 -தீப்பொறி-

தமிழீழம்.

---

இத்துண்டறிக்கை தீப்பொறி வெளியீட்டினரால் வெளிவரப்பெற்றது.

Tamils For A Democratic Eelam, B.M Box 4338, London WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்